**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**OS.No: 195/2023** **நாள் 23.06.2026**

**வாசா.2, திரு.சுடலைக்கனி**

**வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1, 3, 4 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.**

நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் மேலூர் துரைச்சாமிபுரம் வருவாய் கிராமம், சொக்கனாதன்புத்தூர் வருவாய் கிராமம் உ்ளள சொத்துக்கள் என்று சொல்லியுள்ளேன். அந்த அந்த கிராமங்களில் உள்ள சொத்துக்கள விபரம் தெரியுமா என்று கேட்டால் படிப்பறிவு இல்லை என்பதால் சொல்லமுடியவில்லை. பிராது சொத்துக்களை நாங்கள் தான் தென்னை , வாழை , தேக்கு , மாமரம் ஆகியவை வைத்து அனுபவித்து வருவதாக சொல்வது பொய் என்று சொன்னால் அப்படியில்லை. நாங்கள் பிராது சொத்தை அனுபவித்து வருவதாக சொல்லி 14.06.2008 ம்தேதியில கிராம நிர்வாக அதிகாரி வழங்கிய சான்றானதை எங்களால்இவ்வழக்கிற்காகவேண்டி உற்பத்தி செய்யப்படடது என்றால் அது சரியல்ல . எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைப்படம் உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல . பிராது சொத்துக்களை 1 முதல் 4 எதிர்வாதிகள் தான் இன்று வரை அனுபவித்து வருகிறார்கள் என்றும் வாதிகளாகிய நாங்கள் அனுபவித்து வரவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. 1 முதல் 4 எதிர்வாதிகள் பெயரிலான பட்டாவை அவர்கள் மோசடியாக பெற்றுள்ளார்கள் என்று சொல்லி நாங்கள் வருவாய் கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியரிடம், வட்டாட்சியர் அலுவலகத்தில் புகார் மனுவை கொடுத்துள்ளோம். நாங்கள் கொடுத்த புகாரின் பேரில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று கேட்டால் விசாரணைக்குவட்டாட்சியர் அலுவலகத்திற்கு அழைத்தபோது நாங்கள் செல்வோம் ஆனால் பிரதிவாதிகள் விசாரணைக்கு வருவதில்லை. நாங்கள் கொடுத்திருந்த புகார் மனுவினை விசாரிக்கப்பட்டு 1 முதல் 4 எதிர்வா்திகளுக்கு முறையாக தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொல்லி நாங்கள் கொடுத்திருந்த மனுவை தள்ளுபடி செய்து கொடுத்துவிட்டார்என்றால் அப்படியில்லை. வாசாஆ.20 முதுல் 23 வரையிலான ஆவணங்களை வழக்கிற்காக வேண்டி உற்பத்தி செய்யப்பட்டது என்றால அது சரியல்ல. அதுபோல் வாசாஆ.1 முதல் வாசாஆ.6 வரையிலான ஆவணங்களை வழக்கிற்காக வேண்டி உற்பத்தி செய்யப்பட்டது என்றால் அது சரியல்ல. வாசாஆ.2 உயில் ஆவணத்தில் கண்ட சொத்துக்கும் பிராது சொத்துக்கும் எந்தவிதமான சம்மந்தமும்இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. 2023 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வழக்கில்உள்ள 4 ம் எதிர்வாதியானவர் எங்கள் அனுபவத்தை இடைஞ்சல் செய்தார் என்று நான் பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. காவல் நிலையத்தில் நாங்கள் கொடுத்திருந்த புகார் மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்டால் நீதிமன்றத்திற்கு போய்பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். புகார் மனு மீது விசாரிக்கப்பட்டு பிராது சொத்துக்கள் எதிர்வாதிகளின் அனுபவத்தில் தான் உ்ளளது என்றும் நாங்கள் தான் இடைஞ்சல்செய்யகூடாது என்று சொல்லி எங்களை எச்சரித்து அனுப்பிவிட்டார்கள் என்று சொன்னா்ல அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சா்ட்சிய பிரமாண பத்திரிக்கையில் 6 ம் பக்கத்தில் 1 முதல் 3 எதிர்வாதிகளின் தாயார் பார்வதியம்மாள் அவர் தம் கணவர் பெயர் மற்றும் எனது பாட்டியான பார்வதியம்மாளின் தகப்பனார் பெயர் மாடசாமி நாடார் என்ற பெயர் பொறுத்தத்தை தனக்கு சாதகமாக

கொண்டு வருவாய் துறையில் பொய் உறைத்து பட்டாக்களை பெற்றுள்ளார் என்று கூறியிருப்பது வழக்கிற்காக வேண்டி பொய்யானது என்று சொன்னால் அதுசரியல்ல. பிராது சொத்துக்கள் அனைத்தும் 1 முதல 3 எதிர்வாதிகளின் தாயார் பார்வதியம்மாளுக்கு மட்டுமே தனித்து பாத்தியப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. பிராது தபசில் சொத்துக்களை நாங்கள் எக்காலத்திலும் அனுபவித்தது இல்லை என்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார் கள் என்றால் அது சரியல்ல. என் பாட்டி பார்வதியம்மாளுக்கு வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்பதற்காக ஆவணம் எதுவும்இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. பிராது சொ'ததுக்கான மூல பத்திரத்தின் அசலும் , உயிலின் அசலும் எங்கள் வசம் தான் உள்ளது. அந்த அசல் பத்திரங்களை நீதமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நான் தயாராக உள்ளேன். பிராது சொத்தானது என் பாட்டி பார்வதியம்மாளுக்கு பாத்தியதை இல்லை என்பதால் நாங்கள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானதை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல.

**(குறுக்குவிசாரணை 5 முதல் 8 எதிர்வாதிகள் தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 23rd day of June 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.